மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க எண் 4 சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 78/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

8. அரசினர் தீர்மானங்கள்

அ. அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 6-அரசினர் தனித் தீர்மானம்'' என்பது ,இனம் 5—அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல்'' என்ற தலைப்பில் நிதி ஒதுக்க சட்டமுன் வடிவின் பின், எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

9. அரசினர் தனித் தீர்மானம்

நீர் (தூய்மை கெடுதல் கட்டுப்படுத்துதல்) சட்டம்,

(மத்தியச்சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றுதல்

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—'நீர் தூய்மைக் கெடுதலைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், நீரைப்பராமரிப்பதற்கும், சேமித்துவைப்பதற்கும் அது தொடர்பான அல்லது துணைக் காரியங்கள் எல்லாவற்றிற்கும் இடை நிகழ்வான பிறவற்றிற்கும் இந்தியா முழுவதற்கும் ஒரே சீரான சட்டம் இருப்பது விரும்பத்தக்கது என்று இப்பேரவை கருதியுள்ளதாலும்:

இச்சட்டம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாம் விவர அட்டவணையில் பட்டியல் II-லுள்ள 17-ஆம் பதிவுடனும் (நீர் அதாவது பட்டியல் 1 லுள்ள 17 ஆம் பதிவின் விதித்துறைகளுக்குட்பட்டு, குடிநீர் வழங்கல், பாசனக் கால்வாய்கள், வடிகால். ஏரிகளுக்குக் கரை அமைத்தல், நீரைச் சேமித்து வைத்தல் மின்சக்தி) 6ஆம் பதிவுடனும் (பொதுச்சுகாதாரம்—துப்புரவு) தொடர்புடையதாக இருப்பதாலும்;